


# 02.10.2026 செய்திகள்

## ஆசிய விளையாட்டு : அசத்திய தமிழ் முகங்கள்

- ஜப்பான் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் குறிப்பிடத்தகுந்த சாதனைகளைப் படைத்து, நாட்டுக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்ந்திருக்கிறார்கள்.
- **வித்யா ராம்ராஜ் :** தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று வகையான பதக்கங்களையும் வென்று அசத்தி இருக்கிறார். கோவையைச் சேர்ந்த தங்க மகள் வித்யா. மகளிர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் பி.டி.உஷாவின் 42 ஆண்டு கால தேசியச் சாதனையை முறியடித்த அவர், மகளிர் 4 × 400 மீட்டர் தொடர் ஓட்டத்தின் இறுதிச்சுற்றில் அபாரமாக ஓடி இந்திய அணி தங்கப் பதக்கம் வெல்ல முக்கியப் பங்காற்றினார்.
- **அபிநயா ராஜராஜன் :** தென்காசி மாவட்டம் கல்லூத்து கிராமத்தைப் பூர்விகமாகக் கொண்ட 19 வயது இளம் தடகள வீராங்கனை. தனது முதல் ஆசிய விளையாட்டுப் போட்டியிலேயே கலப்பு 4 × 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலம் வென்று முத்திரை பதித்திருக்கிறார்.
- **கமாலினி :** 2026 ஆசிய விளையாட்டில் இந்தியாவுக்கு முதல் தங்கத்தைப் பெற்றுத் தந்த மகளிர் கிரிக்கெட் அணியில் இடம்பெற்ற ஒரே தமிழக வீராங்கனை. இறுதிப் போட்டியில் இலங்கையை 147 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, தங்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்று, இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்!
- **அபய் சிங் :** பெயரைப் பார்த்தால் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரா என்கிற சந்தேகம் எழலாம். ஆனால், அபய் சிங் சென்னை மண்ணில் பிறந்து வளர்ந்தவர். மலேசியாவின் நடப்பு சாம்பியனும் உலகின் முன்னணி வீரருமான ஈன் யோவ்-வை எதிர்கொண்ட இறுதிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற அபய், ஆசிய விளையாட்டுப் போட்டியில் தனிநபர் ஸ்குவாஷ் பதக்கம் வென்ற இரண்டாவது இந்திய வீரர் என்கிற பெருமை யையும் பெற்றுள்ளார். இவரும் வேலவனும் இணைந்து ஆடவர் அணியில் வெண்கலம் வென்றனர்.

SURESH

## வளர்ச்சி அடைந்த நாட்டை உருவாக்கும் முக்கிய தூண் யுபிஎஸ்சி - 100வது ஆண்டு

- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது 1926-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் தேதி பொது சேவை தேர்வாணையம் தொடங்கப்பட்டது.
- நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1950-ம் ஆண்டு இந்த அமைப்பு, மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1952-ம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி குடிமைப்பணி சேவையில் 3 சதவீத பெண்கள் மட்டுமே இருந்தனர்.
- தற்போது 30 சதவீத பெண்கள் குடிமைப் பணி சேவையில் உள்ளனர். யுபிஎஸ்சி அமைப்புக்கு இதுவரை 4 பெண்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று உள்ளனர்.

- **ஜோஷ்னா சின்னப்பா & வேலவன் செந்தில்குமார் :** 40 வயதிலும் களத்தில் தனது அசாத்திய திறமையை வெளிப்படுத்தி வருகிறார் ஜோஷ்னா. 15 வயதில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் அறிமுகமான ஜோஷ்னா, தனது ஏழாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று இம்முறை இரண்டு பதக்கங்களுடன் திரும்புகிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்த வேலவன் செந்தில்குமாருடன் இணைந்து கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலம், மகளிர் அணியோடு சேர்ந்து மற்றுமொரு வெண்கலம் வென்றார்.

- **ஹரிஹரன் அம்சகருணன் :** தமிழகத்தைச் சேர்ந்த 23 வயது இளம் பாட்மிண்டன் வீரர். இரட்டையர் பிரிவில் விளையாடிய அவர், எம்.ஆர்.அர்ஜுனுடன் இணைந்து வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

- **பரணிகா இளங்கோவன் :** தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மண்ணைச் சேர்ந்த பரணிகா, ஆசிய விளையாட்டு வரலாற்றிலேயே போல் வால்ட் பிரிவில் இந்தியாவுக்கு முதல் பதக்கத்தை வென்று வரலாறு படைத்துள்ளார். 4.15 மீட்டர் உயரத்தைத் தாண்டி வெண்கலம் வென்ற அவர், கஜகஸ்தான் வீராங்கனை போலினா இவனோவாவுடனும் இந்தப் பதக்கத்தைப் பகிர்ந்து கொண்டார்.

- **விஷால் டி.கே. :** திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையைச் சேர்ந்த இளம் தடகள வீரர். வித்யா ராம்ராஜ், எம்.ஆர்.பூவம்மா, டி.எஸ்.மனு ஆகியோருடன் இணைந்து கலப்பு 4 × 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றதுடன், ஆடவர் 4 & 400 மீட்டர் தொடர் ஓட்டத்திலும் வெண்கலப் பதக்கம் வென்றார்.

- **இளவேனில் வாலறிவன் :** கடலூரில் பிறந்தவர். சிறு வயதிலேயே குஜராத்துக்குக் குடிபெயர்ந்தவர். தற்போது உள்நாட்டுப் போட்டிகளில் குஜராத் சார்பில் பங்கேற்று வருகிறார். 2026 ஆசிய விளையாட்டுப் போட்டியில் மகளிர் 10 மீட்டர் ஏர் ரைபிள் தனிநபர், குழுப் பிரிவுகளில் வெள்ளிப் பதக்கங்களை வென்று, ஒரே நாளில் இரண்டு பதக்கங்களைக் கைப்பற்றி அசத்தினார்!

- **ஷமீனா ரியாஸ் :** இந்திய முன்னாள் ஹாக்கி கேப்டனும் இருமுறை ஒலிம்பிக்கில் பங்கேற்றவருமான முகமது ரியாஸின் மகள். சென்னையைச் சேர்ந்த 20 வயது ஷமீனா, தனது முதல் ஆசிய விளையாட்டில் இந்திய ஷ்குவாஷ் மகளிர் அணிப்பிரிவில் இடம்பெற்றிருந்தார். விளையாடாவிட்டாலும் அணியில் இருந்ததால் வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

WHY SURESH....
> Comprehensive Coverage
> Expert Faculty & Mentorship
> Rigorous Testing & Analysis
> Structured Study Materials
> 24/7 Doubt - Clearing Support
> Offline Class / Online Class